செ.கு. எண்:- 154 நாள்:- 30.10.2011.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 30.10.2011

சென்னை, கீழ்பாக்கம் மின்வாரியத்தில் மஸ்தூராக பணியாற்றிய திரு. சிவா மற்றும் கம்பியாளர் திரு. அர்ஜுனன் ஆகிய இருவரும் 29.10.2011 அன்று சென்னை சேத்துப்பட்டு பாலம் அருகே உள்ள உயர்மின் அழுத்த டிரான்ஸ்பார்மரில் ஏற்பட்ட பழுதை சரி செய்து கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக அவர்கள் மீது மின்சாரம் பாய்ந்ததில் திரு. சிவா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

திரு. சிவா அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் கம்பியாளர் திரு. அர்ஜுனன் படுகாயமடைந்துள்ளார் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். திரு. அர்ஜுனன் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடமையாற்றிக் கொண்டிருந்த போது காலமான மின்வாரிய மஸ்தூர் ஊழியர் திரு. சிவா அவர்களின் குடும்பத்திற்கு இரண்டு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த திரு. அர்ஜுனனுக்கு 15,000/- ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9